**<u>S.C.No. 17/2021 நாள்: 07.10.2025</u>**

**<u>P.W.41 – முகேஷ் ஜெயக்குமார்</u>**

**ஆரம்பிக்கும் நேரம் – 3.30**

**(குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர். 1ம் எதிரி கோகுலகிருஷ்ணன் (எ) கோகுல், 2ம் எதிரி துரைப்பாண்டி (எ) பாண்டி, 4ம் எதிரி மணிகண்டன் (எ) R.S.மணி, 5ம் எதிரி ரமேஷ் (எ) காவியாரமேஷ், 8ம் எதிரி தமிழரசன், 9ம் எதிரி அஜீத்குமார், 10ம் எதிரி செந்தில் (எ) செந்தில்ஈஸ்வரன், 11ம் எதிரி கலைச்செல்வன், 12ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்.**

**1ஆம் எதிரி, 2 ஆம் எதிரி, 4 ஆம் எதிரி, 12 ஆம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டனர். 5 முதல் 11 எதிரிகள் ஆஜர்.**

**<u>Cr.M.P.1352/2025 –ல் 07.08.2025 அன்று பிறந்த உத்தரவின்பேரில் சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 2, 6, 8, 9 மற்றும் 12 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சாட்சி சஷ்மிதா உங்களிடம் கொடுத்த வாக்குமூலத்தில் பின்வருமாறு "திரும்பி படியில் இருந்து இறங்கும் போது எதிரி பிரேம்குமார் என்பவர் அவர்கள் இருவரையும் பார்த்து, "அவனுக்கு இன்னும் உயிர் இருக்கிறது, அவனை இன்னும் வெட்டுங்கடா" என்றும் பின்னர் "கோகுலும் துரைப்பாண்டியும் என் கணவரை படியில் இழுத்துப்போட்டு வெட்டிவிட்டு, இருவரும் மணிகண்டனின் டியூக் இருசக்கர வாகனத்தில் ஏறி சென்று விட்டனர்" என்று உங்கள் விசாரணையில் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். சாட்சி பெரியசாமி உங்களிடம் கொடுத்த வாக்குமூலத்தில் பின்வருமாறு "பிரேம்குமார் அவன் இன்னும் சாகவில்லை, இன்னும் வெட்டுங்கள் என்று சொன்னவுடன் என் தம்பியை மாறி மாறி

வெட்டினார்கள்" என்று உங்கள் விசாரணையில் கூறவில்லை என்று சொன்னால் பிரேம்குமாரும், ஆர்.எஸ்.மணிகண்டனும், கோகுல் என்ற கோகுலகிருஷ்ணணணிடம் டேய் கோகுல் அவனுக்கு உயிர் இருக்குடா சாகவில்லை, நல்லா வெட்டி சாகடிங்கடா என்று சொன்ன போது அந்த இடத்தில் இருக்கும் நானும் எனது தம்பியின் மனைவி சஷ்மிதா, எனது இன்னொரு தம்பி சசி மற்றும் பக்கத்தில் இருந்தவர்கள் தடுக்க சென்ற போது என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார்கள் என்று கூறியுள்ளார். சாட்சி பிரவீன் என்ற பன்னீர்செல்வம் கொடுத்த வாக்குமூலத்தில் பின்வருமாறு "பிரேம்குமார் அவன் இன்னும் சாகவில்லை, இன்னும் வெட்டுங்கள் என்று சொன்னவுடன் என் தம்பியை மாறி மாறி வெட்டினார்கள்" என்று உங்கள் விசாரணையில் கூறவில்லை என்று சொன்னால் பிரேம்குமாரும், ஆர்.எஸ்.மணிகண்டனும், கோகுல் என்ற கோகுலகிருஷ்ணணணிடம் டேய் கோகுல் அவனுக்கு உயிர் இருக்குடா சாகவில்லை, நல்லா வெட்டி சாகடிங்கடா என்று சொன்ன போது அந்த இடத்தில் இருக்கும் நானும் எனது தம்பியின் மனைவி சஷ்மிதா, எனது இன்னொரு தம்பி சசி மற்றும் பக்கத்தில் இருந்தவர்கள் தடுக்க சென்ற போது என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார்கள் என்று கூறியுள்ளார். முதல் தகவல் அறிக்கையில் 7 வது காலத்தில் கோகுல் த/பெ.முனியப்பன் மற்றும் அஜித்குமார் மற்றும் 2 நபர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றும் 2 நபர்களின் பெயரோ, விலாசமோ குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். கோகுல், அஜித்குமார் இருவரும் பட்டியல் இனத்தை சார்ந்தவர் என்று சொன்னால் இருவரும் பட்டியல் இனத்தை சார்ந்தவர்கள். முதல் தகவல் அறிக்கையில் பட்டியல் இனத்தவர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் பதிவு செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் அஜித்குமார் அருவாளால்

வெட்டியதில் இடது கை புஜம், இடது முழங்கை, இடது கை மணிக்கட்டு, இடது பக்க தலை, இடது கன்னம், தாடை மற்றும் முதுகு ஆகிய இடங்களில் வெட்டுக்காயங்கள் ஏற்ப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பிணக்கூராய்வு அறிக்கையில் மேலே குறிப்பிட்டுள்ள காயங்கள் காணப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நீங்கள் மேற்புலன்விசாரணை கேட்கவில்லை என்று சொன்னால் நான் கேட்கவில்லை. 19.12.2020 அன்று நீதிமன்றத்தில் முதல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த 19.12.2020 தேதியன்று தாக்கல் செய்த இறுதி அறிக்கையில் 11 எதிரிகள் மட்டும் தான் காண்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அதில் 2 முதல் 11 எதிரிகள் பட்டியல் இனத்தை சாராதவர்கள் என்று சொன்னால் சரிதான். பட்டியல் இனத்தை சார்ந்த அஜித்குமாரை நீக்கிவிட்டு பட்டியல் இனத்தை சேராத 2 முதல் 11 எதிரிகளை இந்த வழக்கில் எதிரிகளாக சேர்த்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. 31.12.2020 அன்று தாக்கல் செய்த இறுதி அறிக்கையில் 5ஆம் எதிரி காவியாரமேஷ் என்பவரை சேர்த்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன 5ஆம் எதிரி காவியாரமேஷ் பட்டியல் இனத்தை சாராதவர் என்று சொன்னால் சரிதான். நீங்கள் கூறியவாறு எதிரிகள் யாரையும் சொன்ன நேரத்தில் சொன்ன முறையில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றும் அவர்கள் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றும் பின்னிட்டு வாக்குமூலங்கள் சான்று பொருட்கள் இவ்வழக்கிற்காக தயார் செய்து தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் சம்பவ இடத்தை புலன் விசாரணைக்கு எடுத்தபிறகு சென்று பார்த்தேன். ஏற்கனவே காவல் ஆய்வாளர் பார்வை மகஜரும், வரைபடமும் தயார் செய்து வைத்திருந்ததால் நீங்கள் தனியாக தயார் செய்யவில்லை என்று சொன்னால்

சரிதான். சம்பவ இடத்தில் படிக்கட்டுக்கள் இருந்ததா என்று Platform இருந்தது மற்றபடி படிக்கட்டுக்கள் இல்லை. நீங்கள் சம்பவ இடத்திற்கு சென்று பார்க்கும்போது சம்பவ இடத்தில் அருவாள் ஏதும் இல்லை. நான் பார்க்கும்போது ரத்தம் படிந்த Chair எதுவும் இல்லை. நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது இருசக்கர வாகனம் ஏதும் இல்லை. விபத்து பதிவேடு, சிகிச்சைக்கான ஆவணங்களை நான் பார்த்தேன். திருத்தங்கள் இருந்தால் அது குறித்து விசாரிக்க வேண்டும் என்று சொன்னால் நான் திருத்தங்கள் குறித்து விசாரிக்கவில்லை. பார்வை மகஜர், வரைபடம் ஆகியவைகளில் ரவுண்டானா குறிப்பிட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை. இறந்தவரின் செல்போன் பற்றி உங்கள் விசாரணையில் தெரியவந்ததா என்றால் தெரியவரவில்லை. நீங்கள் இந்த வழக்கினை சரியான முறையில் புலன் விசாரணை செய்யாமல் ஆவணங்களை திருத்தியும், புதியதாக தயாரித்தும் பட்டியல் வகுப்பினர் பாதுகாப்பு சட்டம் வருவதற்காக ஆட்களை சேர்த்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**நீதிமன்ற கேள்வி**

சேலம் ரவுண்டானாவிலிருந்து வழக்கு சம்பவ இடம் கிழக்கே அமைந்துள்ளது.

**<u>Cr.M.P.1351/2025–ல் 07.08.2025 அன்று பிறந்த உத்தரவின்பேரில் சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 5 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சாட்சி அஷ்வினி சம்பவ சமயத்தில் என்ன வேலை செய்து கொண்டிருந்தார் என்று உங்களது விசாரணையில் என்ன கூறியுள்ளார் என்றால் கரூரிலிருந்து கோவை செல்லும் சாலையில் அமைந்துள்ள அமராவதி மருத்துவமனை நர்சிங் பயிற்சி கல்லூரியில் முதலாம் ஆண்டு

படித்து வந்ததாக சொல்லியுள்ளார். சாட்சி அஷ்வினி வாக்குமூலத்தில் கல்லூரிக்கு செல்வதற்காக இளநீர் கடைக்கு சென்று அக்காவிடம் ரூ.50/– பெற்றுக்கொண்டு கல்லூரிக்கு சென்றதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் நடந்து சென்றதாக குறிப்பிட்டுள்ளார். அஸ்வினி கல்லூரியின் படிப்பதற்கு ஆதரவாக அவர் அடையாள அட்டை வாங்கினீர்களா என்றால் வாங்கவில்லை ஆனால் அடையாள அட்டையை பார்த்துள்ளேன். அஸ்வினி மேற்சொன்ன கல்லூரியில் படிக்கிறாரா என்று விசாரித்து தெரிந்து கொண்டீர்களா என்றால் இல்லை. அ.சா.4 அஸ்வினி மேற்சொன்ன கல்லூரியில் படிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. சாட்சி அஸ்வினியில் வாக்குமூலம் 04.10.2020 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. முதல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யும்போது அ.சா.4 அஸ்வினியின் வாக்குமூலம் உங்கள் கையில் இருந்ததா என்றால் நகல் இருந்தது. அஸ்வினியின் வாக்குமூலம் மிகவும் காலதாமதமாக வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. 5ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றும் ஆகையால் தான் முதல் குற்ற இறுதி அறிக்கையில் அவரை எதிரியாக சேர்க்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு சம்மந்தப்பட்ட இருசக்கர வாகனங்களின் பதிவுச்சான்றிதழ்களை நீங்கள் கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரிதான் தொடர்புடைய ஆவணங்களை கைப்பற்றினேன். வட்டார போக்குவரத்து அலுவலரை இதுகுறித்து நீங்கள் விசாரிக்கவில்லை என்று சொன்னால் வட்டார போக்குவரத்து அலுவலருக்கு கடிதம் அனுப்பினேன் பதில் கிடைக்கவில்லை. வட்டார போக்குவரத்து அலுவலருக்கு அனுப்பிய கடிதத்தை இந்த வழக்கில் நீங்கள் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். 5ம் எதிரி சம்பவ சமயத்தில் எதிர்கட்சியில்

முக்கியமான அரசியல் செயல்பாடுகளில் இருந்ததால் அவர் மீது ஆளுங்கட்சியினர் கொடுத்த அழுத்தத்தின் காரணமாக அவர்மீது பொய்யான ஒரு வழக்கை புனையப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**முடிவடையும் நேரம் – 4.20**

**ஒம்/.K.H.இளவழகன்.,**
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.